රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07,ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

මගේ අංකය / எனது இல / My No: CS/ICTS/01/Induction Training Programs
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2021.09.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் நியமனம் பெற்றுள்ள 2 ஆம் வகுப்புடைய புதிய உத்தியோகத்தர்களுக்கு சேவைத் துவக்கப்பயிற்சிப் பாடநெறியை ஏற்பாடு செய்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக எனது இணையிலக்கம் மற்றும் 2020.09.18 ஆந் திகதிய இவ்வமைச்சின் இணையத்தளத்தில் மற்றொரு அறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கடிதத்துடன் தொடர்புடையது.

02. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 2 ஆம் வகுப்பிற்காக 2019.07.01 ஆந் திகதி முதல் ஆட்சேர்க்கப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களைக் கொண்ட ICT2-IND20-2 **குழுவினருக்கு 2020 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி** ஆரம்பிக்கப்பட்டு முதல் இரண்டு நாட்களில் மாத்திரம் நடைபெற்ற சேவைத் துவக்கப்பயிற்சிப் பாடநெறி நாட்டில் நிலவுகின்ற கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக தொடர்ச்சியாக நடாத்த முடியாமற் போனது.

03. அதனால் அக்குழுவினருக்கான சேவைத் துவக்கப் பயிற்சிப் பாடநெறியை **2021.09.21 ஆந் திகதி தொடக்கம் 2021.10.01 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் வாரநாட்களில்** மு.ப **9.00 மணி** முதல் **4.00 வரை** நிகழ்நிலை முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

04. **இப்பயிற்சித் திட்டத்தை நிகழ்நிலை முறையில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்காக பங்குபற்றும் சகல உத்தியோத்தர்களும் நிகழ்நிலை முறையின் ஊடாக MS Teams மென்பொருளுடன் இணைப்பினை மேற்கொள்ளக்கூடிய கணனி மற்றும் இணைய வசதியும் அவசியப்படுகின்றது என்பதோடு இது தொடர்பிலான பயிற்சி அமர்வுவொன்று 2021.09.17 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு நிகழ்நிலை முறையில் நடாத்தப்படும் என்பதுடன் அதற்காக தயவுடன் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.**

05. அதற்கமைய இவ்வுத்தியோகத்தர்களை இதில் பங்கேற்பதற்காக அவசியப்படும் வசதி வாய்ப்புக்களை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்வதோடு, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் புதிய உத்தியோகத்தர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சேவை துவக்கப் பயிற்சித் திட்டத்தினை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு தாங்கள் நல்கும் ஒத்துழைப்புக்கு நன்றி பாராட்டுகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்